கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம். திருமங்கலம்

**30.03.2023**

**அசல் வழக்கு எண். 82/2020**

**வா.சா. 1 – ஆனந்தன்**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

**ஆரம்பித்த நேரம் : 2.50 AM/PM**

நான் என்ன படித்துள்ளேன் என்று கேட்டால் 10 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். என்ன தொழில் செய்து வருகிறேன் என்று கேட்டால் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். நான் எவ்வாறு தொழில் செய்கிறேன் என்று கேட்டால் முகவராக இருந்து தொழில் செய்கிறேன். எத்தனை வருடமாக இந்த தொழில் செய்கிறேன் என்று கேட்டால் 2001 ம் ஆண்டில் இருந்து செய்து வருகிறேன். ரியல் எஸ்டேட் தொழிலில் முகவராக இருப்பதற்கு 2016 ரியல் எஸ்டேட் ரெகுலேசன் அத்தாரிட்டி ஆக்ட்டின்படி முகவராக இருப்பர் அதில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும் என்ற விபரம் தெரியுமா என்று கேட்டால் தெரியாது. அதில் நான் பதிவு செய்யவில்லை. நான் ரியல் எஸ்டேட் முகவர் இல்லை என்றும் வழக்கிற்காக ரியல் எஸ்டேட் தொழில் முகவராக செயல்படுகிறேன் என்று சொல்கிறேன் என்றும், அவ்வாறு ரியல் எஸ்டேட் முகவராக இருக்க வேண்டும் என்றால் மேற்கண்ட சட்டத்தின் படி முகவராக பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. எனக்கும், 1 ம் பிரதிவாதிக்கும் இடையே ஏற்பட்ட வா.சா.ஆ.3 வாடகை ஒப்பந்தம் ஏற்பட்டதாக சொல்லியிருப்பதில் அது என்னிடம் காண்பிக்கப்படும் வாடகை ஒப்பந்த பத்திரமா என்று கேட்டால் ஆம். மேற்கண்ட ஆவணத்தின் பத்திரம் செல்வராஜ், திருமங்கலம் என்பவர் பெயரில் வாங்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். 07.09.2016 ம் தேதி வா.சா.ஆ.3 வாடகை ஒப்பந்த பத்திரம் வாங்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். 07.09.2016 ம் தேதிதான் வா.சா.ஆ.3 வாடகை ஒப்பந்தம் ஏற்பட்டது என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்தில் 2 வது நபர் என்ற இடத்தில் A.C.ஆனந்தன் என்று பத்திரத்தில் 3 பக்கங்களிலும்

என்னுடைய கையெழுத்து செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். 1வது நபராக கையெழுத்து செய்துள்ள ஹேமா என்பவரின் கையொப்பம் ஒவ்வொரு பக்கத்திலும் வெவ்வேறு விதமாக இருக்கிறது என்று சொன்னால் சரியல்ல. ஒரே விதமாகத்தான் உள்ளது. வா.சா.ஆ.3 பிரஸ்தாப 1ம் பிரதிவாதியின் கையெழுத்தினை நாங்களாக மோசடியாக உற்பத்தி செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. அதனால்தான் மேற்படி 1ம் பிரதிவாதியின் கையொப்பம் ஒரே மாதிரியாக உள்ளதாக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணத்தில் 1வது சாட்சியாக பெயர், தந்தை பெயர், ஊர் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது. அவரது கையெழுத்து எதுவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 1வது சாட்சி அவரே கைப்பட எழுதினார். 2வது சாட்சியின் பெயர், தந்தை பெயர், விலாசம் ஆகியவை தெளிவாக இல்லை என்று சொன்னால் சரிதான். அதேபோல் 2வது சாட்சியும் வா.சா.ஆ.3 ஆவணத்தில் கையொப்பம் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. 2வது சாட்சி அவரே கைப்பட எழுதினார். வா.சா.ஆ.3 ஆவணத்தை யார் தயார் செய்தார்கள் என்ற விபரம் வா.சா.ஆ.3 ஆவணத்தில் சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணம் பதிவு பத்திரம் இல்லை என்பதால் தயார் செய்தவர் விபரம் அதில் சொல்லப்படவில்லை. வா.சா.ஆ.3 ஆவணத்தை மோசடியாக நான் தயார் செய்ததால் அந்த ஆவணத்தை தயாரித்தவர் விபரம் சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணத்தில் "மறவன்குளம் கிராமம், சர்வே எண்" என்ற விபரம் மட்டும் தான் காண்பிக்கப்பட்டுள்ளது என்றும், சர்வே எண் என்ன என்று குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். டோர் நம்பர் குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோல் பிராது சொத்து விபரத்தில் ராஜ் காம்ப்ளக்ஸ் என குறிப்பிடப்பட்டுள்ளது ஆனால் வா.சா.ஆ.3 ஆவணத்தின் சொத்து விபரத்தில் ராஜ் காம்ப்ளக்ஸ் என எந்த இடத்திலும் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். அதேபோல் வா.சா.ஆ.3 ஆவணத்தில் மின் இணைப்பு எண் குறிப்பிடப்படவில்லை என்று

சொன்னால் சரிதான். வா.சா.ஆ.3 பத்திரத்தில் தாவா சொத்து 1ம் பிரதிவாதிக்கு எப்படி பாத்தியம் என சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரிதான். அதேபோல் வா.சா.ஆ–3 ஆவணத்தில் பத்தி 3ல் மாத வாடகை ரூ.1000/– 1வது நபர் வசம் செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ள வேண்டும் என 2ம் நபர் சம்மதிக்கிறார் என கூறப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ–3 ஆவணத்தில் 8வது பத்தியில் ஒவ்வொரு மாத வாடகையை 2வது நபர் 1வது நபர் வசம் தவறாமல் செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ள வேண்டும் என கூறப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். ஆனால் ஒரு ரசீதும் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் நான் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். அவர் தாக்கல் செய்வார். நான் தாக்கல் செய்த வழக்கில் நான் கொடுத்த மாத வாடகைக்கு 1ம் பிரதிவாதி ரசீது எதுவும் கொடுக்கவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றும், பொய்யான வழக்கு தாக்கல் செய்த காரணத்தால்தான் முரண்பட்ட சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணத்தில் 8வது பத்தியில் மின் கட்டண தொகையை 1வது நபரே கட்டிக் கொள்ள வேண்டியது என கூறப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். பொதுவாக வாடகைதாரர் தான் அதனை பயன்படுத்தும் மின்சாரத்திற்கான மின்கட்டணம் செலுத்துவார்கள் என்றும், கட்டிட உரிமையாளர் தாவா கட்டிடத்திற்கான மின்கட்டணத்தை செலுத்த மாட்டார்கள் என்றும் சொன்னால் சரிதான். நான் மோசடியாக ஆவணத்தை தயார் செய்தததால் தான் பொதுவான நடைமுறைக்கு விரோதமாக வா.சா.ஆ.3 ஆவணத்தை தயார் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணமாக நான் தாவா கட்டிடத்திற்கான மின்சார ரசீது நான் செலுத்தியதாக தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.1ல் ஒரே ஒரு எண்ணமுடைய ரசீது மட்டும்தான் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். நான் 2016ம் வருடத்திலிருந்து குடியிருந்து வருவதாக சொல்லியுள்ளதில் குறைந்தது 40 ரசீதுக்கு மேலாக எனக்கு

கொடுக்கப்பட்டிருக்கும் என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தில் நான் குடியிருக்கவில்லை என்றும், அதனால்தான் மோசடியாக வா.சா.ஆ.1 ரசீதினை உற்பத்தி செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 ரசீதில் பாலசுப்பிரமணியம் என்ற பெயர் உள்ளது என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.1 ரசீதில் உள்ள மின்கட்டண எண்ணை வழக்கின் சொத்து விபரத்தில் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். மின்கட்டண ரசீதில் கதவு எண்ணோ, கடை எண்ணோ குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.1 ரசீதிற்கும் தாவா சொத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும், அந்த ரசீதை நான் போலியாக உற்பத்தி செய்து வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் R.C.Charges என ரூ.100/− போடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அந்த தொகை எதற்காக செலுத்தப்பட்டுள்ளது என்று கேட்டால் தெரியாது. மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு மீண்டும் பெறுவதற்காக கட்டப்பட்ட தொகைதான் ரூ.100/− என்று சொன்னால் அதுபற்றி எனக்குத் தெரியாது. தாவா சொத்திற்கும் இந்த ரசீதிற்கும் சம்மந்தம் இல்லை என்றும் வேறு ஒரு ரசீதை இந்த வழக்கில் தாக்கல் செய்ததால்தான் அந்த ரசீது பற்றிய முழு விபரமும் எனக்குத் தெரியவில்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.2 வாடகை கட்டிடத்தில் இருப்பதாக கூறி தாக்கல் செய்யப்பட்டுள்ள புகைப்படம் என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.2 புகைப்படத்தில் உள்ள கட்டிடத்தில் சட்டர் மூடியுள்ளதாக காண்பிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.2 புகைப்படத்தில் என்னுடைய புகைப்படம் உள்ளதா என்று கேட்டால் இல்லை. அதேபோல் பக்கத்தில் உள்ள கட்டிடங்கள் எதையும் வா.சா.ஆ.2 புகைப்படத்தில் இருப்பதாக காண்பிக்கப்படவில்லை என்று சொன்னால் சரிதான். அதேபோல் வா.சா.ஆ.2 சட்டரில் உள்ள புகைப்படத்தில் கதவு எண், கடை எண் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.2 புகைப்படமானது வேறு ஒரு இடத்தில் அமைக்கப்பட்டு எடுக்கப்பட்ட புகைப்படம் என்றும்,

வா.சா.ஆ.2ல் உள்ள கட்டிடம் தாவா கட்டிடம் அல்ல என்று சொன்னால் சரியல்ல. உண்மையிலேயே நான் தாவா சொத்தில் இருந்திருந்தால் தாவா சொத்திற்குள் இருந்ததுபோன்று வா.சா.ஆ.2 புகைப்படம் எடுத்திருப்பேன் எனறு சொன்னால் சரியல்ல. அதேபோல் தாவா சொத்திற்குள் உள் கட்டமைப்பு வசதிக்காக ரூ.1,00,000/– செலவு செய்ததாக சொல்வதற்கு எந்த விதமான ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதியிடம் கடைசியாக எப்பொழுது வாடகை கொடுததேன் என்று சொன்னால் 2019–2020ம் வருடம் வரை கொடுத்துள்ளேன். எந்த மாதம் வரை வாடகை கொடுத்துள்ளேன் என்று கேட்டால் ஏப்ரல் மாதம் வரை வாடகை கொடுத்துள்ளேன். 1ம் பிரதிவாதி எங்கு இருக்கிறார் என்று கேட்டால் தெரியாது. நான் 2020ம் வருடம் வாடகை கொடுக்கும்போது 1ம் பிரதிவாதி எங்கிருந்தார் என்று கேட்டால் தெரியாது. 2ம் பிரதிவாதிக்கும், எனக்கும் எவ்விதமான வாடகை ஒப்பந்தமும் கிடையாது என்று சொன்னால் சரிதான். 2ம் பிரதிவாதியிடம் நான் எந்த வாடகையும் கொடுத்ததில்லை என்று சொன்னால் சரிதான். 1ம் பிரதிவாதி ரெப்கோ நிறுவனத்திடம் கடன் பெற்ற விபரம் தெரியுமா என்று கேட்டால் தெரியாது. வழக்கு தாக்கல் செய்வதற்கு வழக்கறிஞருக்கு யார் விபரம் சொன்னார்கள் என்று கேட்டால் நான்தான் சொன்னேன். வழக்கில் தாக்கல் செய்துள்ள reply statement ல் உள்ள கையெழுத்து என்னுடைய கையெழுத்துதான். அதில் 1ம் பிரதிவாதி ரெப்கோ வங்கியில் கடன் வாங்கியுள்ளார் என்ற விபரத்தை கூறியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். அதேபோல் 1ம் பிரதிவாதி ஹேமா தாவா சொத்திற்கு முன்பணம் பெற்று அது தொடாபாக அசல் வழக்கு எண். 302/2020 என்ற வழக்கு திருமங்கலம் சார்பு நீதிமன்றத்தில் நடைபெற்ற விபரம் தெரியுமா என்று கேட்டால் தெரியாது. அவ்வாறு நடைபெறும் வழக்கு பற்றி தெரியாத நிலையில் எவ்விதம் மேற்கண்ட திருமங்கலம் சார்பு நீதிமன்ற அசல் வழக்கு எண். 302/2020 வழக்கு நடவடிக்கை குறித்து என்னுடைய Reply Statement ல் தெரிவித்துள்ளேன் என்று

கேட்டால் மேற்கண்ட வழக்கு விபரம் பற்றி எனக்கு தெரியும். அந்த வழக்கு விபரம் எனக்கு எப்படி தெரியும் என்று கேட்டால் ஞாபகம் இல்லை. மேற்கண்ட வழக்கு பற்றிய விபரம் எந்த வருடம் தெரியும் என்று கேட்டால் ஞாபகம் இல்லை. தாவா சொத்து சம்மந்தமாக வில்லங்கம் எடுத்துப் பார்த்தேனா என்று கேட்டால் இல்லை. நான் தாவா சொத்தை கிரையம் பெறவில்லை. வாடகைக்குத்தான் இருக்கிறேன். நான் தாவா சொத்தை வில்லங்கம் எடுத்துப் பார்த்ததாகவும், அதில் 2ம் பிரதிவாதி பெயர் வரவில்லை என்றும் பதிலுரை தாக்கல் செய்துள்ள விபரங்கள் பொய் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்த பதிலுரையில் சொல்லியுள்ள விபரங்கள் பொய் என்று சொன்னால் சரியல்ல. நான் தாவா சொத்திற்கு வில்லங்கம் போட்டு பார்த்தேன். நான் தாவா சொத்திற்கு வாடகைதாரர் என்றும் நான் ஏன் வில்லங்கம் போட்டு பார்த்தேன் என்று கேட்டால் 1ம் பிரதிவாதியிடம் ரூ.50000 /– அட்வான்ஸ்சாக கொடுத்துள்ளேன் என்றும், அதனால் தாவா சொத்திற்கு வில்லங்கம் போட்டு பார்த்தேன். திருமங்கலம் சார்பு நீதிமன்றத்தில் நடைபெறும் அசல் வழக்கு எண். 302/2020 வழக்கு விபரமும் எனக்கு தெரியும் என்று சொன்னால் சரிதான். தெரியும். என்னிடம் காண்பிக்கப்படும் அசல் வழக்கு எண். 302/2020 பிராது நகலை சாட்சியிடம் காண்பித்தபோது பார்வையிட்டு இது அந்த வழக்கிற்கான பிராது நகல் இல்லை என்று கூறுகிறார். அந்த வழக்கில் என்ன பரிகாரம் கேட்டுள்ளனர் என்ற விபரம் தெரியுமா என்று கேட்டால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள பதிலுரையில் ஏற்றதை ஆற்றும் பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்திருப்பதாக நான் கூறியுள்ள விபரம் அனைத்தும் பொய் என்று சொன்னால் சரியல்ல. அசல் வழக்கு எண். 302/2020 வழக்கு பற்றிய விரபம் எனக்கு எதுவும் தெரியாது என்றும் அதனால்தான் மேற்கண்ட வழக்கு பற்றிய வபிரங்களை முன்னுக்பின் முரணாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு மூலமாகவோ அல்லது நீதிமன்றத்தில் இருந்து அனுப்பப்பட்ட சம்மன் மூலமாகவோ இந்த வழக்கு பற்றிய விபரங்களை

தெரிவித்தேனா என்று கேட்டால் சொல்லப்பட்டுள்ளது. வழக்கு பற்றிய விபரம் 1ம் பிரதிவாதிக்கு தெரியவில்லை என்றும், 05.11.2020 தேதியிட்ட நீதிமன்ற அழைப்பாணை மற்றும் வழக்கறிஞர் மூலமாக அனுப்பபட்ட private Notice அறிவிப்பும் 1ம் பிரதிவாதிக்கு சார்பாகாமல் 1ம் பிரதிவாதி வீட்டின் கதவு பூட்டப்பட்டுள்ளதாக திருப்பப்பட்டுள்ளது என்று சொன்னால் எனக்கு அதுபற்றி தெரியாது. இந்த வழக்கில் 1ம் பிரதிவாதிக்கு தெரியாமல் 2ம் பிரதிவாதியை ஏமாற்றி நீதிமன்றத்தையும் ஏமாற்றி உத்தரவு பெற வேண்டும் என்பதற்காக முயற்சி மேற்கொண்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. 05.11.2020ம் தேதி நான் போலியாக கருப்பசாமி என்ற வழக்கறிஞரை நீதிமன்றத்தில் 1ம் பிரதிவாதிக்காக நியமித்து அவர் மூலமாக வக்காலத்து தாக்கல செய்வதாக undertake செய்தும், பின்பு அவர் நீதிமன்றத்தில் ஆஜராகாததால் 1ம் பிரதிவாதிக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பெறப்பட்டு நீதிமன்றத்தில் 1ம் பிரதிவாதிக்கு எதிராக உத்தரவு பெற முயற்சி மேற்கொண்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கும், 1ம் பிரதிவாதிக்கும் அசல் வழக்கு எண். 82/2020 வழக்கு நடைபெறுவது தொடர்பாக போஸ்டர் ஒன்று ஒட்டப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அதைப் பார்த்த பிறகுதான் 2ம் பிரதிாவதி தன்னையும் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்க சொல்லி மனு செய்து அதன் அடிப்படையில் முழுமையான விசாரனைக்கு பின்பு 2ம் பிரதிவாதியும் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்திற்கும், எனக்கும் 1ம் பிரதிவாதிக்கும் தற்போது எந்த சம்மந்தமும் இல்லை என்றும், 2ம் பிரதிவாதி மட்டும் தாதன் தாவா சொத்திற்கு தற்போது முழுமையான உரிமையாளர் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்திற்கும், எனக்கும் எந்த காலத்திலும் சம்மந்தம் இல்லை என்றும், நான் தாவா சொத்தில் எந்த காலத்திலும் வாடகைதாரராக இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்வதற்கான விசிட்டிங் கார்டு, ஐடி கார்டு, போஸ்டர் ஆகியவற்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால்

சரிதான். நான் உண்மையிலேயே ரியல் எஸ்டேட் தொழில் செய்யவில்லை என்றும், 2ம் பிரதிவாதியிடம் இருந்து பணம் பறிக்கும் நோக்கத்தில் எனக்கும், 1ம் பிரதிவாதிக்கும் வாடகைதாரார், சுவான்தாரர் என்ற உறவுமுறை இருப்பதாக சொல்லி வாடகை ஒப்பந்தம் ஒன்றை போலியாக ஏற்படுத்தி அதன் அடிப்படையில் இந்த வழக்கினை நடத்தி வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. அதனால் நான் கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும், என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் என்னை வெளியேற்ற முயற்சி செய்ததாக சொல்வது தொடர்பாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேனா என்று கேட்டால் கொடுத்துள்ளேன். அதன் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்று கேட்டால் இல்லை. அந்த புகார் நகல் என்கைவசம் உள்ளது. அந்த புகார் தொடர்பாக காவல் நிலையத்தில் ரசீது கொடுத்துள்ளார்களா என்று கேட்டால் கொடுத்துள்ளார்கள். ரசீது எண் தெரியுமா என்று கேட்டால் தெரியாது. இந்த புகாரை நான் யாருக்கு எதிராக கொடுத்துள்ளேன் என்று கேட்டால் 1ம் பிரதிவாதி ஹேமாவிற்கு எதிராக கொடுத்துள்ளேன். 1ம் பிரதிவாதியை அழைத்து காவல் நிலையத்தில் விசாரித்தார்களா என்று கேட்டால் 1ம் பிரதிவாதி காவல் நிலையத்திற்கு வரவில்லை. தற்போது அந்த புகாரின் பேரில் முதல் தகவல் அறிக்கை போட்டுள்ளார்களா என்று கேட்டால் அதுபற்றி எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி எங்கிருக்கிறார் என்று எனக்கு தெரியாத நிலையில் நான் காவல் நிலையத்தில் எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றும் புகார் கொடுத்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 2ம் பிரதிவாதி சொத்து வாங்கிய விபரம் எனக்கு எப்பொழுது தெரியும் என்று கேட்டால் கிரையம் வாங்கிய விபரம் தெரியாது. 2021ம் வருடம் கருப்பு வெள்ளை சட்டை பேண்ட் போட்டு 25 நபர்களுக்கு மேல் கடைக்கு வந்து சட்டரை மூடுங்கள் என்று சொல்லி கடையின் உள்ளே இருந்த சேரை வெளியே போட்டனர். இதற்கிடையில் பக்கத்தில் இருந்த நபர்கள் வந்த பிரச்சினையை

விலக்கி விட்டனர். இவ்வழக்கு யார் யாருக்கிடையில் நடக்கிறது என்று தெரியுமா என்று கேட்டால் தெரியும். ஹேமா மீது தான் வழக்கு போட்டேன். அதற்கு பின்பு சௌந்திரபாண்டியன் தன்னையும் இந்த வழக்கில் சேர்த்துக் கொள்ள மனு செய்தார் அதன்படி அவரையும் இந்த வழக்கில் சேர்க்கப்பட்டது. 2021ம் வருடம் தாவா சொத்தில் வந்த 2ம் பிரதிவாதி பிரச்சினை செய்யவில்லை என்றும் அவ்வாறு 2ம் பிரதிவாதி பிரச்சினை செய்திருந்தால் நான் தாக்கல் செய்த வழக்கில் 2ம் பிரதிவாதியையும் தரப்பினராக சேர்த்து வழக்கு தாக்கல் செய்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. 2ம் பிரதிவாதி தன்னுடைய சொத்தினை பாதுகாப்பதற்காக இந்த வழக்கில் 2ம் பிரதிவாதியாக தன்னை சேர்த்து எதிர்வியாஜ்ஜியம் செய்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**முடிவடைந்த நேரம் : 04.15 PM**